


**We Shine Academy**™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## நவம்பர் - 24.11.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- விருதுகள்











## இந்திய நிகழ்வுகள்

- மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் புத்தாக்கப் பிரிவின் **புத்தாக்க நிறுவன ஆணையமானது புதுடெல்லியில்** தொடங்கப்பட்டுள்ளது. இது நாடெங்கிலும் உள்ள அனைத்து உயர்கல்வி நிலையங்களிலும் புத்தாக்க (Innovative) கலாச்சாரத்தை முறையாக வளர்ப்பதற்காக அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவில் இந்த ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. **(AICTE – All India Council for Technical Education)**

- பருவநிலை மாற்றத்தை எதிர் கொள்வதற்கான **பாரீஸ் ஒப்பந்தத்தை** திறம்பட செயல்படுத்துவதற்கு வளரும் நாடுகளுக்கு வளர்ச்சி அடைந்த நாடுகள் ஆதரவு அளிப்பதை வலியுறுத்துவதற்கான, பருவநிலை மாற்றம் மீதான பேசிக் **(BASIC)** நாடுகளின் அமைச்சர்களுக்கிடையேயான **27வது சந்திப்பு புது டெல்லியில்** நடைபெற்றது.
    - 2019ம் ஆண்டிற்கான பேசிக் நாடுகளின் அமைச்சர்களுக்கிடையேயான சந்திப்பை பிரேசில் நடத்தவுள்ளது.
- குறிப்பு:
    - பேசிக் நாடுகளானது **(BASIC Country)** – **பிரேசில், தென் ஆப்பிரிக்கா, இந்தியா மற்றும் சீனா** ஆகிய 4 பெரிய புதிதாக தொழில்மயமான நாடுகளின் கூட்டணி ஆகும்.
    - இது **2009** ஆம் ஆண்டு நவம்பரில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்டது.

## உலக நிகழ்வுகள்

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் **(UNEP – United Nations Environment Programme)** நிர்வாக இயக்குநராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் பதவி விலகியதையடுத்து, **UNEP** – ன் தற்காலிக இயக்குநராக தான்சானியா நாட்டைச் சேர்ந்த **“ஜாய்சி முசியா”** நியமிக்கப்பட்டுள்ளார்.



We Shine Academy ™

- உள் தணிக்கை அறிக்கையின் படி, UNEP – ல் இவர் விதிமுறையை மீறியுள்ளது குறித்து எழுந்த குற்றச்சாட்டை அடுத்து சொல்ஹெய்ம் பதவி விலகியுள்ளார்.

- மொராக்கோ நாடானது தனது **"முகமது – VI – B"** என பெயரிடப்பட்டுள்ள இரண்டாவது புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை வெற்றிகரமாக செலுத்தியுள்ளது. இந்த செயற்கைகோளானது, தென் அமெரிக்காவின் பிரெஞ்சு கயானாவில் உள்ள **கயானா விண்வெளி மையத்தின் ஏவுதளத்திலிருந்து "ஏரியன் ஸ்பேஸ் வேகா"** ராக்கெட் மூலம் செலுத்தப்பட்டது.
- குறிப்பு:
    - நவம்பர் 2017ல் வேகா இராக்கெட் மூலம் செலுத்தப்பட்ட மொராக்காவின் முதல் செயற்கைகோள் - **"முகமது – 6A"** என்பதாகும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- புகழ்பெற்ற முதல் தர கிரிக்கெட் வீரரான **வாசிம் ஜாபர், ரஞ்சி கோப்பை கிரிக்கெட்** போட்டியில் **11,000 ரன்களை கடந்த முதலாவது இந்திய வீரராக உருவெடுத்துள்ளார்.** இவர் நாக்பூர் நகரில் பரோடோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் இச்சாதனையை நிகழ்த்தினார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **பாலில் கலப்படம் இருந்தால் ஸ்மார்ட்போன் மூலமாகவே கண்டுபிடிக்கும்** வசதியை ஹைதராபாத் ஐஐடி மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர். **ஹாலோ குரோமட்டிக்** என்று அழைக்கப்படும் நானோ அளவிலான இண்டிகேட்டர் காகிதத்தில் பொருத்தி சென்சார் செய்யும் வகையில் உருவாக்கியுள்ளனர்.
    - இதன்மூலம், அந்த காகிதத்தில் ஏற்படும் நிறமாற்றத்தைக் கொண்டு, அதன் **PH** மதிப்பை எளிதில் காணமுடியும்.

- **சீனாவானது** சூரியனின் மையப்பகுதியின் வெப்பநிலையான 15 மில்லியன் டிகிரி செல்சியஸ்-ஐ விட ஆறு மடங்கு அதிகமான அளவில் **100 மில்லியன் டிகிரி செல்சியஸ் வெப்பநிலையை எட்டக்கூடிய செயற்கை சூரியனை** உருவாக்கியுள்ளது.

  - சீனாவின் பிளாஸ்மா இயற்பியல் கல்வி நிறுவனத்தின் அறிவியலாளர்கள் இந்த செயற்கை சூரியனை கண்டறிந்துள்ளனர். இது பூமியில் அணுக்கரு இணைவு செய்யத் தேவையான வெப்பநிலையாகும்.

## நியமனங்கள்

- சென்னை உயர்நீதிமன்றத்தின் **61வது நீதிபதியாக வினீத் கோத்தாரி** நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு தலைமை நீதிபதி **விஜய தஹில் ரமணி** பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.
- குறிப்பு:
  - சமீபத்தில் 60வது நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் - பி.புகழேந்தி

## விருதுகள்

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (**UNEP**) – **2018 ஆம் ஆண்டின் ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருதிற்காக** வனவிலங்கு குற்றத் தடுப்பு கழகம் **(WCCB - Wildlife Crime Control Bureau)** மற்றும் அதன் அமலாக்கத் துறை தலைவர் **R.S. ஷரத்தை** தேர்ந்தெடுத்தது.
  - எல்லை கடந்த சுற்றுச்சூழல் குற்றங்களுக்கு எதிராக போராடுவதில் அவர்களின் சிறந்த பங்களிப்பிற்காக முறையே அமைப்பு மற்றும் தனிநபர் என்ற பிரிவுகளில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.